# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## THIRD YEAR EXAMINATION IN BACHELOR OF BUSINESS ADMINISTRATION / COMMERCE (EXTERNAL) – 2008 / 2009

## HELD IN AUGUST – 2009

## BBA / COM 38 – ORGANIZATIONAL BEHAVIOUR

எவையேனும் ஐந்து (05) வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. அ) 'நிறுவன நடத்தை' யினை வரைவிலக்கணப்படுத்துக.
(05 புள்ளிகள்)

ஆ) நிறுவன நடத்தை பற்றிய அறிவு முகாமையாளர்களுக்கு ஏன் அவசியம் என விபரிக்குக.
(06 புள்ளிகள்)

இ) நிறுவன நடத்தைக்கு பங்களிப்புச் செய்கின்ற பல்வேறு வகையான நடத்தையியல் ஒழுங்குகள் (Behavioural Disciplines) பற்றி சுருக்கமாக விபரிக்குக.
(09 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

02. அ) ஆளுமை (Personality) என்றால் என்ன என்பதை சுருக்கமாக விபரிக்குக.
(04 புள்ளிகள்)

ஆ) தனிநபர் ஒருவருடைய ஆளுமையினை தீர்மானிக்கின்ற காரணிகள் பற்றி விளக்குக.
(06 புள்ளிகள்)

இ) வேலையோடு தொடர்பான மூன்று மிகப்பிரதானமான மனப்பாங்குகளை (Job – related attitudes) அடையாளங்கண்டு, அதில் தனிநபர்களின் தொழில் திருப்தியினைத் தீர்மானிக்கின்ற காரணிகள் பற்றி விபரிக்குக.
(10 புள்ளிகள்)

(மொத்தம்20 புள்ளிகள்)

03. "மனித நடத்தையானது குழுக்களால் செல்வாக்குச் செலுத்தப்படுகின்றது."

அ) ஏன் மக்கள் குழுக்களாக இணைந்து கொள்கிறார்கள்? சுருக்கமாக விளக்குக.
(06 புள்ளிகள்)

ஆ) முறைசார்ந்த, முறைசாராத குழுக்களை வித்தியாசப்படுத்துக.
(06 புள்ளிகள்)

இ) "ஒரு குழுவில் உயர்வான ஊழியர் இணைவு (High Cohesiveness) உயர்வான குழு உற்பத்தித்திறனுக்கு (Higher group productivity) வழி வகுக்கும்." இக்கூற்றுடன் இணங்குகிறீரா? அல்லது இல்லையா? விளக்குக.
(08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

(தொடர்……2ல்)

04. அ) ஒருவருடைய நடத்தைக்கு ஊக்கப்படுத்துதல் ஏன் முக்கியமானது?

(04 புள்ளிகள்)

ஆ) ஊக்கப்படுத்துதல் செய்முறையில் கோட்பாடு X , Y யின் பிரயோகங்கள் என்ன?

(06 புள்ளிகள்)

இ) "ஊழியர்களை ஊக்கப்படுத்துவதில் பணமானது மிக முக்கியமான காரணியாகக் காணப்படுகின்றது." இக்கூற்றுடன் நீர் இணங்குகின்றீரா? பொருத்தமான கோட்பாட்டுப் பின்னணியுடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

05. அ) வித்தியாசமான தலைமைத்துவப் பாணிகளை (Leadership styles) சுருக்கமாக விபரிக்குக.

(04 புள்ளிகள்)

ஆ) "தலைவர்கள் பிறப்பதில்லை, மாறாக உருவாக்கப்படுகிறார்கள்" இக்கூற்றுடன் நீர் இணங்குகிறீரா? நியாயப்படுத்துக.

(08 புள்ளிகள்)

இ) "தீர்மானமெடுத்தலில் வினைத்திறனான தொடர்பாடல் முக்கியமான இடத்தினை வகிக்கின்றது." வினைத்திறனான தொடர்பாடலுக்கான தடைகள் யாவை எனக் கூறுக.

(08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

06. அ) வேலையின்போது, ஊழியர்களுக்கு ஏற்படும் அழுத்தங்களுக்கான மூலங்களை அடையாளங்கண்டு, அதிகரித்த அழுத்தங்களால் ஏற்படும் விளைவுகள் யாவை?

(10 புள்ளிகள்)

ஆ) "இன்று மாற்றமானது, அனேகமான முகாமையாளர்களுக்கு தொடர்ச்சியானதொரு நடவடிக்கையாகும்."

i. மாற்றத்திற்கான காரணிகள் பற்றியும் மாற்றத்திற்கு தடையாக இருக்கின்ற காரணிகள் பற்றியும் சுருக்கமாக விளக்குக.

(06 புள்ளிகள்)

ii. மாற்றத்திற்கான தடைகளை வெற்றிகொள்ள முகாமையாளர்கள் பின்பற்றும் தந்திரோபாயங்கள் யாவை?

(04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*****